பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 20 புதன்கிழமை 04.01.2023 கதிர் 310

## ஆள்கடத்த முயற்சித்த நபருக்கு ஜனவரி 16 வரை மறியல் நீடிப்பு

**(ந.லோகதயாளன், இ. கலையமுதன்)**

நாடொன்றுக்கு 104 ரோஹிங்கியரை ஆள் கடத்த முயற்சித்த நபரை ஜனவரி 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மியன்மாரில் இருந்து விரட்டப்பட்ட 8

# ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் இராணுவம்

## எல்லே குணவங்ச தேரர் குற்றச்சாட்டு அமெரிக்கத் தூதுவர் மீதும் பாய்ச்சல்



இலங்கையில் போராட்டத்தின் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சித் திட்டத்தின் பின்னணியில் இராணுவமும் செயற்பட்டது எனப் பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் எல்லே குணவங்ச தேரர்.

இராணுவத்தின் பிரதானிகள் சிலரே இதன் பின்னணியில் செயற்பட்டனர் எனவும், அவர்கள் தொடர்பான விவரங்களை வெளியிட முடியாது எனவும் தேரர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

இலங்கையில் பலவீனமான நிலையை உருவாக்குவதற்கான பேச்சுகள் அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றன. இதில் இலங்கை இராணுவ அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். போர்க்குற்றச்சாட்டு விவகாரத்தை காண்பித்து இராணுவ அதிகாரிகளை, தமது பக்கம் இழுத்துள்ளனர்.

அரச சொத்துகள் தீக்கிரையாக்கப்படும்போது இராணுவம் 2

# மாற்றத்துக்காகப் போராடியவர்கள் தேர்தலுக்கு உடனே தயாராகுங்கள்



## சாணக்கியன் எம்.பி. அறைகூவல்

மாற்றத்துக்காகப் போராடியவர்கள் அனைவரும் தேர்தலுக்கு உடனடியாகத் தயாராக வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார். 2

### குட்டித் தேர்தல் கூட்டமைப்பு மும்முரம்

## மைத்திரி, விமல், டலஸ் அணிகள் 'வெற்றிலை' சின்னத்தில் போட்டி?



உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளக் கட்சிகள் பல தயாராகி வருகின்றன. அந்தக் கட்சிகள் கூட்டணி அமைப்பது பற்றிப் பேசுவதும் வேட்பாளர்களை நியமிப்பதும் என தமது அரசியல் செயற்பாட்டை 2

### உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

## வேட்புமனு ஏற்கும் திகதி அறிவிப்பு




உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் தேர்தல்கள் ஆணைக்குழு இன்று அறிவித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 21ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் 2

## மீண்டும் பிளவடையும் ராஜபக்ஷக்களின் கட்சி

### வலுப்பெறும் எதிரணி வரிசை




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் மேலும் பிளவு ஏற்பட்டுள்ளது என அக்கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் இருந்து இன்னோர் அணி பிரிந்து எதிர்க்கட்சி வரிசையில் 2

## சஜித்துடன் சந்திரிகா கூட்டணி



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சஜித் 8

## மன்னாரில் யானை தாக்கி கடற்படைச் சிப்பாய் மரணம்

(ந.லோகதயாளன்)

மன்னார், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கடற்படை முகாமில் கடமையில் இருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

பொல்பித்திகம பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.எம்.எஸ். பி.ரத்நாயக்க (வயது - 41) என்ற கடற்படைச் சிப்பாயே உயிரிழந்துள்ளார் என்று சிலாபத்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 2

## தேர்தலை ஒத்திப்போட முயன்றால் இரண்டு வழிகளில் போராட்டங்கள்

### அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தீர்மானம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ள நிலையில், ஏதாவது தந்திரோபாயத்தைப் பயன்படுத்தித் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக பாரியளவில் இரண்டு கட்டங்களாகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

முதலாம் கட்டப் போராட்டமாக நீதிமன்றம் செல்லுதல். வரலாற்றில் முதல் தடவையாக இதில் அதிக 8

## ரயிலில் மோதி குடும்பஸ்தர் பரிதாபச் சாவு

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த புலத்சிட்டி ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் தகவலை வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார ஊடகங்களிடம் இன்று தெரிவித்தார்.

புனானை ரயில் நிலையத்துக்கும் வாழைச்சேனை ரயில் நிலையத்துக்கும் இடையில் அமைந்துள்ள 2

## யாழில் கத்திமுனையில் பணம், நகை கொள்ளை



யாழ்., கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த நால்வரைக் கொண்ட வன்முறைக் குழு, வாள்களைக் காட்டி மிரட்டி பணம், நகை, அலைபேசிகள் என்பனவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2

## மாற்றத்துக்காக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தேசிய எல்லை நிர்ணயக் குழுவை சாணக்கியன் எம்.பி. இன்று சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றத்தைக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தற்போது ஜனநாயகரீதியாக ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இவ்வாறு அவர்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். எனவே, அவர்கள் அனைவரும் ஆர்வமாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குத் தயாராக வேண்டும்.

அரசில் இருக்கும் ஒரு சிலர் தேர்தலுக்கு நிதி இல்லை எனச் சொல்லும் நொண்டிசாட்டுகள் தொடர்பில் கரிசனை செலுத்தாமல், அனைவரும் தேர்தலுக்குத் தயாராக வேண்டும்.

அதேபோன்று உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் மேலும் பல விடயங்கள் தொடர்பில் நாம் பேசியிருந்தோம்.

குறிப்பாக வட்டாரங்களின் எண்ணிக்கையினைக் குறைக்கும் வகையிலான சில செயற்பாடுகளை அரசு முன்னெடுத்துள்ளது. இதற்கு ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் துணைபோகும் வகையில் செயற்படுகின்றனர்.

எனினும், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வட்டாரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமே ஒழிய குறைக்கப்பட்டக் கூடாது. இந்த விடயத்தை நாம் இன்று வலியுறுத்தியுள்ளோம் – என்றார்.

## ஆட்சிக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் அமைதி காத்தது? கடைசி நேரத்தில் ஜனாதிபதியின் உத்தரவைக்கூட பாதுகாப்பு தரப்பு ஏற்கவில்லை. அமெரிக்க தூதுவர், தூதுவர் போல் செயற்படவில்லை. அவர் நலன்புரி அமைப்பொன்றின் செயலாளர் போல்தான் செயற்பட்டு வருகின்றார். ஏனைய சில தூதரகங்களும் இதனுடன் தொடர்புபட்டிருந்தன.

நாட்டில் நெருக்கடி நிலைமை இருந்தது. அதனை சர்வதேச சக்திகள் பயன்படுத்திக்கொண்டன. உண்மையாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் இருக்கின்றனர். அதன்பின்னர் சர்வதேச சக்திகள் புகுந்தன. றோ அமைப்பு, சி.ஐ.ஏ. போன்ற புலனாய்வு அமைப்புகளும் இறங்கின. டயஸ்போராக்களும் இருந்துள்ளனர் – என்றார்.

## யாழில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலிருந்தவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அந்தக் கொள்ளைக் குழு உள்நுழைந்து வீட்டிலிருந்தவர்களைக் கயிற்றால் கட்டிவைத்துவிட்டு இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

10 பவுண் நகைகள், ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் 3 அலைபேசிகள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயிலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டமாடி பாலத்துக்கு அருகில் நேற்றிரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகம்மதியா வீதி, செம்மண்ஓடை, வாழைச்சேனை எனும் முகவரியில் வசிக்கும் செய்னுலாப்தீன் இக்பால் கலால்தீன் (வயது – 39) என்ற குடும்பஸ்தரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னாரில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச்சிலாபத்துறைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மீண்டும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்ந்து சுயாதீனமாக செயற்படப் போவதாகத் தெரியவருகின்றது.

இந்தக் குழுவின் யோசனைகளை – கருத்துக்களை அரசு புறக்கணித்து நடப்பதாலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது.

## மைத்திரி, ரணில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கின்றன. அந்தவகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ச அணி மற்றும் டலஸ் அழகபெருமஅணிஆகியவைஒன்றிணைந்து கூட்டணியாகக் களமிறங்குவது பற்றிப் பேசி வருகின்றன.

அப்படியானால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னமான வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதென்ற ஒரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சின்னம் இருப்பது சுதந்திரக் கட்சியில் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்தக் கூட்டணிக்கு யார் தலைவர் என்பதில்தான் சிக்கல் நிலவுகின்றது.

சின்னம் 'வெற்றிலை' எனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அடிப்படையாகவைத்துத்தான் கூட்டணி உருவாகும். அதற்காக சு.கவின் தலைவரானமைத்திரிபாலசிறிசேனவை கூட்டணிக்குத் தலைவராகப் போட முடியாது என்று டலஸ் அணி தெரிவித்துள்ளது.

அதற்குக் காரணம் ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது உள்ளமைதான்.

அதனால் புதிய தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று டலஸ் அணியினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

சுதந்திரக் கட்சி அதற்குத் தலை அசைத்துள்ளது. தனியாகத் தலைவர் ஒருவரை நியமிக்காமல் தலைமைத்துவ சபை ஒன்றை அமைப்பதற்கு யோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்படவில்லை.

## வேட்புமனு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த வாய்ப்பு உள்ளது.

அதேவேளை, எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முனைப்புடன் ஈடுபடுக!

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நாட்டில் உள்ள மொத்தம் 341 உள்ளூராட்சி சபைகளில் 340 உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்பு மனுக்கள் வரும் 18 முதல் 21 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வகையில் பார்த்தால் இது தேசிய ரீதியில் நடைபெறப்போகும் ஒரு குட்டிப் பொதுத் தேர்தல் தான்.

கடந்த ஆண்டில் பெரும் அரசியல் சூறாவளியாக வீசிய மக்கள் போராட்டத்தின் பின்னர் இலங்கை மக்களின் கருத்து நிலைப்பாடு யாது என்பதை உரசிப் பார்க்கும் ஒரு வாக்களிப்பு இது.

அதனால்தான் இந்தத் தேர்தல், இந்தக் கட்டத்தில், முக்கியத்துவம் பெறுகிறது.

அதனால்தான் இந்தத் தேர்தலை ஆளும் தரப்பு ஏதேனும் சண்டப் பிரசண்டம் பண்ணித் தள்ளிப் போட வழி சமைக்கும் என்று பலரும் சந்தேகிக்கின்றனர்.

ஒரு முக்கியமான சமயத்தில் வரும் ஒரு முக்கியமான தேர்தல் இது என்று சொன்னால் அது தப்பில்லை.

ஆனால் அப்படி ஒரு முக்கியமான தேர்தலை வழமைக்குமாறாக மக்கள் சுரத்தினின்றி, நம்பிக்கையின்றி, ஈடுபாடின்றி, வரவேற்பின்றி, அதிக விருப்பின்றி எதிர்கொள்வதும் நோக்கப்படக் கூடியது.

அதற்குக் காரணங்கள் உண்டு.

எந்தக் காரணத்தையும் காட்டி, இந்தத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு – தள்ளிப் போடுவதற்கு –இடமில்லாத இறுதி நேர இக்கட்டு வரை காத்திருந்து, வேறு வழியின்றி, கடைசி நேரத்தில் தேர்தல் ஆணையம் தேர்தல் பற்றி அறிவித்திருக்கின்றது.

இந்தத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி ரணிலின் அரசாங்கம் தனது திட்டம் என்ன, இலக்கு என்ன, கருத்தியல் யாது. அணுகுமுறை எவ்வாறு அமையும் என்பதை வெளிப்படையாகத் தெளிவுபடுத்தாமல் கடைசி நேரம் வரை ஒழித்து பிடித்து விளையாடுவதும் கண்கூடு.

இந்தத் தேர்தல் நடக்குமா, அதை நடக்க இடம் அளிப்போமா அல்லது அதைக் கடைசி நேரத்தில் தள்ளிப் போட நடவடிக்கை எடுப்போமா என்பவை தொடர்பில் நிலைமையை வெளிப்படையாக மக்களுக்கு தெளிவு படுத்தாமல், சூது விளையாடுவது போல அரசியல் தந்திரம் காட்டுகின்றது அரசுத் தலைமை.

அதனால் – இந்த அரசின் திட்ட நகர்வுகள் குறித்து மக்களுக்குப் பலத்த சந்தேகமும், அதிருப்தியும் இருப்பதினால் – மக்கள் இந்த தேர்தலில் இன்னமும் – வேட்பு மனுத் தாக்கலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட – முழு ஈடுபாடு காட்டாமல், ஏனோ தானோ என்று தள்ளி நின்று பார்க்கும் நிலைமையை நீடிக்கின்றது.

வேட்புமனுக்கள் கோரப்பட்டு விட்டன. வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் கூட தேர்தல் தள்ளிப் போகலாம். இந்த அரசு அத்தகைய சின்னத்தனமான அரசியல் கைங்கரியம் பண்ணும் என்பதும் மறுக்கக் கூடியதல்ல.

ஆனாலும் அப்படி நடந்தாலும் கூட, தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்களின் அடிப்படையிலேயே ஆறு மாதங்களோ அல்லது ஒரு வருடமோ கழித்துக் கூட தேர்தல் நடக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

எனவே, என்ன காரணம் கருதியும் வேட்புமனுத் தாக்கல் விடயத்தில் அசிரத்தையாக – விட்டேத்தியாக – இல்லாது முழு முனைப்பில் ஈடுபடுவது ஒவ்வொரு உள்ளூர்வாசியினதும் கடமையாகும்.




## மானிய விலையில் நடமாடும் அரிசி விநியோகம் காரைநகரில் ஆரம்பம்!

காரைநகர் கூட்டுறவு சங்கம் ஊடாக நடமாடும் அரிசி விநியோக சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதி செய்யும் நோக்கில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் முதற்கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் கூட்டுறவு சங்கங்களினூடாக மானிய விலையில் தரமான அரிசியை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சந்தை விலையிலும் 50 ரூபா விலை குறைத்து மானிய அடிப்படையில் வடக்கு மாகாண மக்களுக்கு வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்றிட்டம் முதல் கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்றிட்டம் மூலம் மக்களின் பொருளாதார சுமையை ஓரளவுக்கு குறைத்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதி செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டம் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், காரைநகர் பிரதேச செயலாளர், காரைநகர் பிரதேச சபை தவிசாளர், காரைநகர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## வடமேல் மாகாண பிரதம செயலராக ரஞ்சித் ஆரியரத்ன நியமிக்கப்பட்டார்!



வடமேல் மாகாணத்தின் பிரதம செயலாளராக ரஞ்சித் ஆரியரத்னவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

ரஞ்சித் ஆரியரத்னவின் நியமனம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அமுலுக்கு வரும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விரைவில் அமைப்பு என்கிறார் விஜேதாஸ!

இனங்களுக்கிடையில் சிதைவடைந்திருக்கும் நல்லிணக்கத்தை மீளக் கட்டியெழுப்ப எடுக்கும் நடவடிக்கை மக்களை ஏமாற்றுவதற்கான நடவடிக்கை அல்ல. மாறாக உளப்பூர்வமாகவே மேற்கொள்வதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை அமைக்கவும் நடவடிக்கை எடுப்பேன் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்– சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்காத மற்றும் நீதியை நிலைநாட்டுவதில் தாமதம் ஏற்படும் நாடு என எமது நாட்டுக்கு குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலை இருக்கும்போது முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு அது தடையாக இருக்கின்றது. அதனால் இந்த குற்றச்சாட்டுக்களில் இருந்து மீள்வதற்காக நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி உட்பட பல நிலைமைகள் காரணமாக நீதிமன்றங்களில் 11 லட்சம் வழக்குகள் குவிந்துள்ளதுடன் 26ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருப்பது பாரிய நிலைமையாகும்.

மேலும் கடந்த காலங்களில் தலைதூக்கி இருந்த பொருளாதாரப் பிரச்சினை காரணமாக அராஜக நிலையில் இருந்த நாட்டைப் பொறுப்பெடுப்பதற்கு யாரும் முன்வராத நிலைமையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஓரளவு ஆறுதலான சூழல் ஏற்பட்டு, நாடு ஸ்திர நிலைக்கு மீண்டு வந்துகொண்டிருக்கின்றது.



அத்துடன் நீதி கட்டமைப்பைப் புதுப்பிப்பதற்காக 22 புதிய சட்ட மறுசீரமைப்புகளுக்கு கடந்த 6 மாதங்களுக்குள் அனுமதித்துக் கொண்டுள்ளோம்.

சட்டங்களை இயற்றுவதுபோல் அதனை செயற்படுத்துவதற்கும் மேற்படி நிறுவனங்கள் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்ந்து பார்த்து சட்டக் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்காக ஊழல் எதிர்ப்பு சட்டத்தை விரைவாக அனுமதித்துக்கொள்ள இருக்கின்றோம்.

அத்துடன் இனங்களுக்கிடையில் சிதைவடைந்துள்ள நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் பாரிய பொறுப்பு நீதி அமைச்சுக்கு சாட்டப்பட்டிருக்கின்றது. இன ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது மக்களை ஏமாற்றுவதற்கு அல்ல. மாறாக உளப்பூர்வமாகவே மேற்கொள்வதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். – என்றார்.

# பாகிஸ்தானில் எரிவாயு சிலிண்டர்கள் தட்டுப்பாடு: பிளாஸ்டிக் பைகளில் காஸ் நிரப்புகின்ற மக்கள்!





இஸ்லாமாபாத், ஜன.04

பாகிஸ்தான் கடந்த சில ஆண்டுகளாக கடுமையான பொருளாதார நெருக்கடியில் தவித்து வருகிறதுடன் சரிந்து வரும் பொருளாதாரத்தின் விளைவாக, பாகிஸ்தான் அரசாங்கம் அதன் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்கத் தவறிவிட்டது. பணவீக்கம் காரணமாக அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்ந்துள்ளதுள்ளமையால் அந்த நாட்டு மக்கள் அன்றாட வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அங்கு வீடுகளில் சமையலுக்குப் பயன்படுத்தும் எரிவாயு சிலிண்டர் உற்பத்தி போதிய அளவு இல்லாததால் சிலிண்டருக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதோடு எரிவாயு சிலிண்டரின் விலையும் அதிகரித்து வருகிறது. இதனால் எரிவாயு சிலிண்டர் விற்பனையாளர்கள் விநியோகத்தை வெகுவாகக் குறைத்துள்ளனர். இதன் விளைவாக அந்த நாட்டு மக்கள் சிலிண்டர்களுக்கு பதிலாக பிளாஸ்டிக் பைகளில் எரிவாயுவை நிரப்பிச் செல்லும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அங்குள்ள கைபர் பக்துங்வா மாகாணத்தில் மக்கள் இவ்வாறு பிளாஸ்டிக் பைகளில் எரிவாயு நிரப்பி செல்லும் வீடியோ மற்றும் படம் சமூக வலைத்தளங்களில் வைரலானதைத் தொடர்ந்து, இத்தகவல் வெளியாகியுள்ளது. எரிவாயு விற்பனை நிலையங்களில் பிளாஸ்டிக் பைகளில் 3 அல்லது 4 கிலோ எரிவாயு நிரப்ப சுமார் ஒரு மணிநேரம் ஆகிறது என்றும் எரிவாயு நிரப்பிய பைகளை வால்வு பொருத்தி இறுக்கமாக மூடிக்கொடுக்கிறார்கள் என்றும் அந்நாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

பிளாஸ்டிக் பைகளில் எரிவாயு நிரப்பி செல்லும் மக்கள் அதில் மின்சாரத்தில் இயங்கக்கூடிய சிறிய உறிஞ்சு குழாயை பொருத்தி பயன்படுத்துகின்றனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே பிளாஸ்டிக் பைகளில் எரிவாயு நிரப்பிச் செல்வது கையில் வெடிகுண்டு எடுத்து செல்வதற்கு சமம் என்றும், இதனால் மிகவும் மோசமான விபத்துகள் நிகழும் அபாயம் உள்ளதாகவும், இந்த பிளாஸ்டிக் பைகளால் காயமடைந்து 8 நோயாளிகள் பாகிஸ்தான் மருத்துவ அறிவியல்

கழகத்தின் தீக்காய பராமரிப்பு மையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனசும் தகவல்கள் வெளியாகி உள்ளன.



# சீனப் பயணிகளைக் குறி வைக்கும் தீவிர கொரோனாக் கட்டுப்பாடுகள்

## பெய்ஜிங் கண்டனம் தெரிவிக்கின்றது

பிஜீங், ஜன.04

சீனாவில் கடந்த சில நாள்களாக கொரோனா உச்சத்தில் இருந்து வருகிறது. தினமும் பல்லாயிரக் கணக்கானோருக்கு கொரோனா பாதிப்பு ஏற்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. ஒமைக்ரான் வைரசின் பிஎப்.7 வகை திரிவு சீனாவில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து சீனாவில் இருந்து வரும் பயணிகளுக்கு கொரோனா பரிசோதனை, சான்றிதழ் கட்டாயம் என அமெரிக்கா, கனடா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கட்டுப்பாடு விதித்துள்ளன. மேலும், சீனாவில் இருந்து வரும் பயணிகளை கண்காணிக்கவும் பல்வேறு நாடுகள் முடிவு செய்துள்ளன. இந்நிலையில், தங்கள் நாட்டில் இருந்து வரும் பயணிகளுக்கு கொரோனா பரிசோதனை கட்டாயமாக்கப்பட்டுள்ளதற்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பெய்ஜிங்கில் சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மாவொ நிங் கூறுகையில் –

தங்கள் நாட்டிற்குள் நுழைய சீன பயணிகளை மட்டும் குறிவைத்து சில நாடுகள் கட்டுப்பாடுகள் விதித்துள்ளன. இது அறிவியல் ஆதாரப்பூர்வமற்றது. இந்த நடைமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது. பரஸ்பர கொள்கையின் அடிப்படையில் சீனா எதிர் நடவடிக்கைகளை எடுக்க முடியும்–என்று தெரிவித்துள்ளார்..

# அமெரிக்க நாடாளுமன்றம் மீண்டும் தாக்கப்படலாமாம்

## வாய்ப்பு என பொலிஸார் எச்சரிக்கை..!!



வாஷிங்டன், ஜன.04

அமெரிக்காவில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பைடனுக்கு சான்றிதழ் அளிப்பதற்காக நாடாளுமன்றம் கூடியது. அப்போது தேர்தலில் தோல்வி அடைந்த முன்னாள் ஜனாதிபதி டிரம்பின் ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கானோர் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இந்த கலவரத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர். அமெரிக்காவையே உலுக்கிய இந்தச் சம்பவத்தை தொடர்ந்து நாடாளுமன்றம் அமைந்துள்ள வொஷிங்டனில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு அமுலில் இருந்தது.

இந்த நிலையில் 2021ஆம் ஆண்டு நடந்தது போலவே மீண்டும் அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்தப்படுவதற்கான அச்சுறுத்தல் இருப்பதாக நாடாளுமன்றத் தலைமைப் பொலிஸ் அதிகாரி தாமஸ் மேங்கர் எச்சரித்துள்ளார். நினைத்து பார்க்க முடியாதது நடக்க வாய்ப்பு இருப்பதாகவும், எனவே மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் அவர் பொலிஸாரை அறிவுறுத்தியுள்ளார்.

முன்னதாக 2021 இல் நடந்த நாடாளுமன்ற கலவரம் குறித்து விசாரித்து வந்த நாடாளுமன்ற விசாரணைக் குழு சமீபத்தில் விசாரணையை முடித்து அறிக்கை தாக்கல் செய்தது. அதில் கலவரத்துக்கு டிரம்ப்தான் காரணம் என்றும் அவர் மீது 4 கிரிமினல் குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய வேண்டும் எனவும் விசாரணை குழு பரிந்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்க ஐரோப்பிய கூட்டமைப்பு முடிவு!






மாஸ்கோ, ஜன.04

சீனாவில் கொரோனாத் தொற்றுப் பாதிப்பு அதிகரித்து வருகின்றமையுடன் உருமாறிய பிஎவ்.7 கொரோனா அங்கு ஆதிக்கம் செலுத்துகிறது. இதன் காரணமாக சீனத் தடுப்பூசிகளின் திறன் குறித்து சந்தேகம் நிலவுகின்றதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில், சீனாவுக்கு இலவசமாக தடுப்பூசிகள் தந்து உதவுவதற்கு தயார் என ஐரோப்பிய கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐரோப்பிய கூட்டமைப்பின் அதிகாரி ஒருவர் கூறும்போது –

சீனாவுக்குப் பொது சுகாதார நிபுணத்துவம் மற்றும் இலவச தடுப்பூசிகளை வழங்க ஐரோப்பிய கூட்டமைப்பு தயாராக உள்ளது. இது தொடர்பாக ஐரோப்பிய கூட்டமைப்பு சுகாதார ஆணையாளர் ஸ்டெல்லா கிரியாகைட்ஸ், சீன சுகாதார ஆணையாளருக்குத் தெரிவித்து இருக்கிறார் என்றார்.

# 2 ஆவது முறையாக மலையாளப் பெண் அமெரிக்காவில் நீதிபதியாக பதவி ஏற்பு





திருவனந்தபுரம், ஜன.04

தொடர்ந்து 02 ஆவது முறையாக மலையாளப் பெண் ஒருவர் அமெரிக்காவில் நீதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார். அமெரிக்காவில் சமீப காலமாக இந்தியர்கள் நீதிபதி பதவிகளை வகித்து வருகின்றனர். அவர்களில் ஒருவர், ஜூலி ஏ.மேத்யூ. இவர் கேரள மாநிலம் திருவல்லாவை சேர்ந்த மலையாளப் பெண் ஆவார்.

கேரளாவில் பல ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு கிராம பள்ளிக்கூடத்தில் படித்து வந்த இவர் தற்போது நீதிபதியாக உயர்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் பிலடெல்பியா மாகாணத்தில வளர்ந்த அவர் பென் மாகாண பல்கலைக்கழகத்திலும், டெலவாரே சட்ட கல்லூரியிலும் படித்து சட்டத்தரணி ஆனார். 15 வருடங்கள் சட்டத்தரணியாக பணியாற்றினார். 4 ஆண்டுகளுக்கு முன்னர் நீதிபதி ஆனார். இதன்மூலம் அங்கு முதல் இந்திய வம்சாவளி பெண் நீதிபதி என்ற பெயரைப் பெற்றார். இப்போது தொடர்ந்து 2 ஆவது முறையாக அவர் டெக்சாஸ் மாகாணத்தில் போர்ட் பென்ட் கவுண்டியில் நீதிபதியாகி இருக்கிறார். இந்த பதவிக்காக நடந்த தேர்தலில், ஜனநாயக கட்சி வேட்பாளராக களம் இறங்கிய இவர், குடியரசு கட்சி வேட்பாளர் ஆண்ட்ரூ டார்ன்பர்க்கை வீழ்த்தி வெற்றி கண்டிருக்கிறார். இதன் மூலம் அங்கு இன்னும் 4 ஆண்டுகள் நீதிபதி பதவி வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியா – சீனா அசல் எல்லைக் கோட்டை மாற்ற சீனா முயன்றது என்கிறார் அமைச்சர் ஜெய்சங்கர்!



வியன்னா, ஜன.04

சீனா பல்வேறு ஒப்பந்த விதிமீறலில் ஈடுபட்ட சம்பவங்கள் நடந்துள்ளன என்று ஆஸ்திரியா நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அந்நாட்டில் செயல்பட்டு வரும் தினசரிப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டு உள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் -

இந்தியா மற்றும் சீனா என இரு நாடுகளும், அசல் எல்லை கோட்டை தன்னிச்சையாக மாற்ற கூடாது என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் ஒருதலைப்பட்ச முடிவு எடுத்து, அதனை மாற்ற முயன்றனர். அதனால், எங்களது அனுபவத்தில் நேரிடையாக இதுபோன்ற

விடயங்களை நாங்கள் புரிந்து கொள்ள முடிந்தது. எல்லைப் பகுதிகளில் படைகளை குவிக்கக் கூடாது என சீனாவுடன் எங்களது ஒப்பந்தம் உள்ளது. ஆனால், அவர்கள் அதனை பின்பற்றவில்லை. அதனாலேயே, தற்போது நாங்கள் பதற்றம் நிறைந்த சூழலை எதிர்கொண்டு உள்ளோம் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், சீனா எங்களை நோக்கி, நீங்கள் ஒப்பந்தங்களை பின்பற்றவில்லை எனக் கூறலாம். ஆனால் செயற்கைக்கோள் புகைப்படங்கள், யாரிடம் தவறு உள்ளது என்று தெளிவாகக் காட்டும் என்று அவர் கூறியுள்ளார்.

அத்துடன், பயங்கரவாதத்தினால் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை பற்றி ஆஸ்திரிய நாட்டு தலைவர்களுடன் பேசினேன் என்றும், எல்லை கடந்த

பயங்கரவாதம், வன்முறை, தீவிரவாதம் மற்றும் அடிப்படைவாதம் உள்ளிட்டவற்றை பற்றியும் நாங்கள் விரிவாக பேசினோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## சிங்கப்பூரில் புத்தாண்டன்று பெண்ணுக்கு பாலியல் தொல்லை; இந்தியர் கைது..!!

சிங்கப்பூர், ஜன.04

சிங்கப்பூர் நாட்டில் செண்டொசா தீவில் தனியார் நட்சத்திர ஹோட்டல் உள்ளது. இந்த ஹோட்டலில் 2023 புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி டிசம்பர் 31 ஆம் திகதி இரவு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது அந்த ஹோட்டலில் இருந்த இந்தியரான சுப்ரமணியன் முரளிமனோகர்ஜோஷி என்பவர் அங்கு வந்திருந்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் முரளிமனோகரை 2 மணி நேரத்தில் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இந்தியர் எதிர் வரும் வரும் 30ஆம் திகதி வரை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குற்றம் நிரூபிக்கப்படும்பட்சத்தில் அவருக்கு 3 முதல் 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# அ.தி.மு.க. பொதுக்குழு விவகாரம் தொடர்பான மனு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு

புதுடெல்லி, ஜன.04

கடந்த ஆடி மாதம் 11 ஆம் திகதி நடந்த அ.தி.மு.க. பொதுக்குழு செல்லாது என்ற தனி நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்குகளை சென்னை உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு கடந்த ஆவணி 25 ஆம் திகதி விசாரித்தது.

இந்த வழக்கில் கடந்த செப்டம்பர் 2 ஆம் திகதி அளித்த தீர்ப்பில், பொதுக்குழு செல்லாது என்றும், ஜூன் 23 ஆம் திகதிக்கு முந்தைய நிலையே நீடிக்க வேண்டும் என்றும் தனி நீதிபதி பிறப்பித்த தீர்ப்பை ரத்து செய்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம், பி.வைரமுத்து சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், சென்னை எயர் நீதிமன்றில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை

உறுதிசெய்ய வேண்டும் என்றும் இரு நீதிபதிகள் கடந்த செப்டம்பர் 2 ஆம் திகதி பிறப்பித்த உத்தரவில் அனைத்து அம்சங்களும் ஆராயப்படவில்லை, எனவே இரு நீதிபதிகளின் தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி, ரிஷிகேஷ் ராய் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது.வ்அந்த மனுக்களை உச்ச நீதிமன்றம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் விசாரிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# போசாக்குக் குன்றிய குழந்தைகளுக்கு 250 சத்துமாப் பொதிகள் விநியோகம்!





(வி.ரி.சகாதேவராஜா)

சமகால பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டு போசாக்குக் குன்றிய குழந்தைகளுக்கு மட்டக்களப்பு றோட்டரிக்கழகம் 250 சத்து மாப்பொதிகளை நேற்று முன்தினம் வழங்கி வைத்தது. மட்டக்களப்பு றோட்டரி கழகம், செங்கலடி பிரதேச சுகாதார சேவைகள் திணைக்களத்தோடு இணைந்து அப்பிரதேசத்திலுள்ள போசாக்குக் குன்றிய குழந்தைக ளுக்கான 250 சத்துமா பொதிகளை வழங்கி வைத்தது. இந் நிகழ்வானது மட்டக்களப்பு றோட்டரி கழக தலைவர் றோட்டரியன் புஞ்சியப்பு ரமணதாஸ தலை மையில் நடைபெற்றது. அப்பிரதேசத்திற்கு பொறுப்பான மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி திருமதி பாத்திமா பஸ்நத்தின் பங்குபற்றலுடன் செங்கலடி பிரதேச சுகாதார சேவைகள் அலுவலகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

## பாண்டிருப்பில் நேற்று நடந்த புத்தாண்டு மனமகிழ் நிகழ்வு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் புத்தாண்டு மனமகிழ் விழா கலை, கலாசார பாரம்பரிய விளையாட்டு போட்டி நிகழ்வாக நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே .அதிசயராஜ் பிரதமர் விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாண்டிருப்பு இந்து கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவம்பிரதேசசெயலகதிட்டமிடல்பிரிவுஉத்தியோகத்தரர்களால் நடத்தப்பட்டது.

புத்தாண்டை வரவேற்கும் முகமாக பாரம்பரிய, கலாச்சார விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெற்றன. தமிழ், முஸ்லிம் உத்தியோகத்தர்கள் பரஸ்பரம் புரிந்துணர்வு மற்றும் சந்தோசத்துடன் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.



## தகவல் தொழில்நுட்ப பிரிவு கிழக்கு சுகாதார அமைச்சில்





(அபு அலா)

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கேற்ப நாம் அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளவும், அதேபோன்று தகவல்களையும் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்புகள் அதிகமுள்ளன என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று அமைச்சின் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து விடயங்களையும் திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் எமது வேலைகளை மிக இலகுவாக செய்து முடிக்கலாம் என்றார்.

இந்நிகழ்வில், அமைச்சின் கணக்காளர் எஸ்.சற்குணேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவாணி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (திருமதி) எஸ்.விஜயகுமார் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மண்முனை வடக்கில் முதியோர் ஒன்றுகூடல்



மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு முதியோர்களின் ஒன்றுகூடலும் அவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வும் இருதயபுரம் மேற்கு முதியோர் சங்க தலைவர் பி. கிருஸ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்துக்கு பிரதம அதிதி யாக மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் ஷியாஹுல் ஹக், விசேட அதிதியாக மருத்துவர் எஸ். கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இச்சங்கத்தின் செயலாளர் என். ஜெகநாதன், பொருளாளர் எஸ். டானியல் குணநாதன், இருதயபுர கிராமசேவை உத்தியோகத்தர் சுகந்தி ஜெகதர்ன், சமூக சேவை உத்தியோகத்தர் பி. ராஜ்மோகன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயதர்சன் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## மலவாயிலில் ஹெரோயினை வைத்துக் கடத்தியவர் கைது

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு 10 கிராம் ஹெரொயின் போதைப் பொருளை கொண்டு சென்ற ஒருவரை கந்தளாயில் வைத்து இன்று தாம் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

10 கிராம் ஹெரொயின் போதைப்பொருளை 100 பைக்கட்டுகளில் இட்டு மலவாயில் ஊடாக மறைத்து கொண்டு சென்ற போதே கந்தளாய் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேக நபரை கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் இராணுவ புலனாய்வு பிரிவினர் சந்தேக நபரை கைது செய்து கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கந்தளாய் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அதிகூடிய ஹேரொயின் போதைப் பொருள் தொகை இதுவாகும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரைத்தாங்கள்தடுத்துவைத்துவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையோடு கந்தளாய் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மலாய் இஸ்லாமிய சர்வதேச செயலகத்தின் இணைப்பாளராக ஏ.எம்.ஜெமீல் நியமனம்!





(எம்.எம்.அஸ்லம்)

மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாம் அவர்கள் தலைமையிலான மலாய் ,ஸ்லாமிய சர்வதேச செயலகத்தின் இலங்கைக் கான இணைப்பாளராக முன்னாள் கிழக்கு மாகாண சபையின் குழுத் தலைவரும் College of Management and Technology (CMT Campus) தவிசாளருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டுள்ள மலாக்கா ஆளுநரின் பங்குபற்றலுடன் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின்போதே அவரால் இந்நியமனம் வழங்கி வகைப்பட்டது.

அதேவேளை, கலாநிதி ஏ.எம்.ஜெமீல் அவர்களின் அழைப்பின் பேரில் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாம் அவர்கள், இன்று (புதன் கிழமை) கல்முனைக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மேலதிகமாக 33 பஸ்கள் சேவையில்!

### போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் இரவீந்திரன் தகவல்



கொழும்பில் இருந்து வடக்கு மாகாணத்துக் கான ரயில் சேவைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி யுடன் அநுராதபுரத்துடன் மட்டுப்படுத்தப்பட வுள்ள நிலையில் , யாழ்ப்பாணம் – கொழும்பு பஸ் சேவைக்காக மேலதிகமாக 33 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

கொழும்பு யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை, வவுனியா அநுராதபுரம் பாதை திருத்த வேலை காரணமாகக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு ரயில் சேவை இடைநிறுத்தப்படுகின்றது .

அதனால் வீதி பயணிகள் போக்குவரத்து அதி கார சபை ,தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ரயில் திணைக்களத்தினருடன் இணைந்து சில ம ாற்று நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம்.

அந்த வகையில் குறிப்பாக தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, ரயில் திணைக்களம், வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையுடன் இணைந்து என்ன மாற்றங்களை செய்யலாம் என்பதை தீர்மானித்து மூன்று வகையான தீர் மானங்களை எடுத்திருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்கின்ற யாழ்.ராணி தற்பொழுது முறிகண்டி வரை பயணிக்கின்றது வவுனியா வரை செல்வதற்கு ஒழுங்கு செய்யப் பட்டிருக்கின்றது.

வவுனியாவில் இருந்து அநுராதபுரம் சென்று ரயிலில் கொழும்பு செல்ல விரும்புவோருக்காக வவுனியா அநுராதபுரத்துக்கு 20 பஸ்கள் மேலதி கமாக சேவையில் ஈடுபட உள்ளன.

தனியார் போக்குவரத்து சேவை மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் அந்தந்த மாவட்டத்தில் இருந்து நேரடியாக அநுராதபுரத்துக்கு சென்று அங்கே பயணிகளை செல்லக்கூடியவாறு ஒழுங்கு செய்திருக்கின்றோம்.

நேரடியாக பஸ்களிலே கொழும்புக்கு செல் லக்கூடியவாறான ஏற்பாடுகளும் செயற்படுகின்றது. குறிப்பாக நேரடியாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பல குளிரூட்டப்பட்ட பஸ்கள் சேவை யில் ஈடுபடுகின்றன.

தற்பொழுது 38 பஸ்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக கொழும்பிற்கு சேவையில் ஈடுபடுகின்றன. அவைகள் தங்களுக்கு ஏற்ற முற்பதிவுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அதை விட மேலதிகமாக 33 குளிரூட்டப்பட்ட பஸ்கள் இருக்கின்றன. அந்த பஸ்களும் தற்போது கடந்த கால கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சேவைகள் ஈடுபடவில்லை. அந்த 33 பஸ்களையும் மீண்டும் சேவையில் ஈடுபடுமாறு அதனோடு தொடர்புடையவர்களைக் கோரியுள்ளோம்.

எனவே, உயர்ந்த சேவை நிறுத்தப்பட்டாலும் பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவைகள் தடைப்படாது செயற்படுத்துவதற்கு முயற்சிக்கின் றோம் எனத் தெரிவித்தார்.

## 33 உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்கின்றது சீனா!

### அமைச்சர் பந்துல தகவல்



இலங்கையில் இருந்து சீனாவிற்கு 33 உணவுப்பொருள் களை ஏற்றுமதி செய்வதற்கு சீனாவின் சுங்க நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், பந்துல குணவர்தன தெரிவித் தார். இவற்றில் 29 தயாரிப்புகள் கடல் மீன்பிடி நீர்வாழ் பொருள் கள் என்றும், அங்கு பதிவு செய்யப் பட்ட 38 இலங்கை நிறுவனங்கள் ஏற்றுமதியாளர்களாகச் செயல் படுகின்றன எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று (செவ்வாய்க் கிழமை) நடைபெற்ற அமை ச்சரவை முடிவுகளை அறிவிக் கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

## முட்டைகளை இறக்குமதி தீர்மானம் மீள்பரிசீலனை செய்தல் வேண்டும்!

### அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கட்டுப்பாடுகளின்றி முட்டைகளை இறக்குமதி செய்தால் இலங்கைக்கு ஏவியன் இன்புளுவன்சா எனும் வைரஸ் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாக அரச கால்நடை வைத்திய அதி காரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அரச கால்நடை வைத்தியர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சிசிர பியசிறி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அமைச்சரவையின் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நடவடிக்கை நாட்டில் பறவைக் காய்ச்சலை உருவாக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான தீர்மானம் அவசியமான ஒன்று என பல பிரதேசங்களில் நுகர்வோர் தெரிவிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடிதம்




ஆசிரியர்களின் தற்காலிக இணைப்பை நீடிப்பது தொடர்பாக கல்வி அமைச்சு செயலாளருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக ஆசிரிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர்சேவைசங்கம்நேற்று(செவ்வாய்க்கிழமை) கல்வி அமைச்சு செயலாளர்க்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் பிரதீப் தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தவணை வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு ஆசிரியர்கள் பல்வேறுப் பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்குகின் றனர்.

இதில் போக்குவரத்து மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் காரணமாக ஆசிரியர்களுக்கு 2022.12.31ஆம் திகதிவரை வழங்கப்பட்டிருந்த தேசிய மற்றும் மாகாண தற்காலிக இணைப்பை 2023. மார்ச் 24ஆம் திகதி வரை நீடிப்பதற்கான கோரிக்கை தொடர்பாக சங்கம் உங்கள் கவனத்திற்கு கொண்டு வரு கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆள் கடத்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோஹிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேசில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேசியாவுக்குத் தப்பிச் செல்லும் நோக்கில் படகு மூலம் சட்ட விரோதமாகப் பயணித்த போது யாழ். மருதங்கேணி அருகே நடுக்கடலில் படகு பழுதடைந்து தத்தளித்தனர்.

இவ்வாறு தத்தளித்தவர்கள் 2022 டிசம்பர் 17 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு டிசம்பர் 18 ஆம் திகதி கடற்படையினரின் படகு மூலம் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

சட்டத்துக்குப் புறம்பாக இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட 104 பேர் மற்றும் அவர்களைச் சட்டத்துக்குப் புறம்பாக நாடு கடத்த முற்பட்ட வலையமைப்புக்கு உதவியவருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காங்கேசன்துறை பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

டிசம்பர் 19 ஆம் திகதி மாலை 105 பேரும் தடுத்து வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், 104 பேரையும் அகதிகளுக்கான ஐ.நா ஆணையகம் பொறுப்பேற்பதாயின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அனுமதி பெற உத்தரவிட்டதுடன் அகதிகள் அனைவரையும் மீரிகான தடுப்பு முகாமில் தங்க வைக்க உத்தரவிட்டார். அத்துடன், நாடொன்றுக்கு 104 பேரையும் கடத்த முயற்சித்தவரை 2023 ஜனவரி 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

இந்நிலையிலேயே ஜனவரி 2 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்த போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

104 ரோஹிங்கிய அகதிகளும் மீரிகான தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## சஜித்துடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், சந்திரிகா தலைமையிலான அணி ஒன்றும் இணைந்து களமிறங்கவுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இருவரும் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

மொட்டுக் கட்சியில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் அநுரபிரியதர்சன யாப்பா – சந்திம வீரக்கொடி உள்ளிட்ட அணியினர் சந்திரிகாவுடன் இணைந்து போட்டியிடவுள்ளனர் என்றும்தகவல்கள்வெளியாகியுள்ளன.

## தேர்தலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையிலான சட்டத்தரணிகள் ஆஜராவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக நாடாளுமன்றத்துக்கு வெளியே பாரிய மக்கள் போராட்டம். நாடு பூராகவும் இந்தப் போராட்டங்களை முன்னெடுப்பதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.01.2023 இல் வெளியிடப்பெற்றது.